தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989, பிப்ரவரி 18, சனிக்கிழமை.

மாசி 7, விபவ, திருவள்ளுவர் ஆண்டு—2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு."

ஒப்புரவு எனும் பெருங்குணத்தால் உலகம் வாழ வேண்டும் என்று விரும்பும் பேரறிவாளரிடத்திலே உள்ள செல்வம், ஊரார் விரும்பி அருந்தும் நீரைக் கொண்ட ஊருணி, என்றும் நீரால் நிறைந்தாற் போன்றது.

1. கவன ஈர்ப்பு.

சர்க்கரை ஆலைகள் கரும்பு விலையை உயர்த்தாததால் கரும்பு உற்பத்தியாளர்கள் படும் அவதி குறித்து.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லெவி சர்க்கரையின் விலையை ரூ. 510-லிருந்து ரூ. 5-25-க்கு ஏற்றியும், பகிரங்க சந்தைக்கு 50 விழுக்காட்டிலிருந்து 55 விழுக்காடாக ஒதுக்கீடு அதிகமாக்கியும், சர்க்கரை ஆலைகள் கரும்பு விலையை ஏற்றாததாலும், ஆள் சம்பளம், உர விலை ஏற்றத்தினாலும் கரும்பு உற்பத்தியாளர்கள் படும் அவதி குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(திரு கோ. சி. மணி) [1989 பிப்ரவரி 18

அறிக்கை.

மைய அரசு தான், ஒவ்வொரு ஆண்டும், கரும்பு (கட்டுப்பாடு) சட்டம் 1966-ன் கீழ் கரும்பிற்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அதன்படி நடப்பு 1988-89-ஆம் ஆண்டுக்கு மைய அரசு 8.5 விழுக்காட்டிற்கு சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்பிற்கு குறைந்தபட்ச விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 190 என்று விலை நிர்ணயம் செய்துள்ளது. இருப்பினும் மாநில அரசு, கரும்பு பயிர் செய்வதற்கான செலவினங்களைக் கருத்தில் கொண்டு, விவசாயிகளின் நலனைக் கருதி, நடப்பு 1988-89 ஆம் பருவத்திற்கு கரும்பிற்கு மாநில அரசின் பரிந்துரை விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 220 வழங்கும்படி உத்தரவிட்டுள்ளது. இந்த விலை 8.5 விழுக்காட்டிற்கு சர்க்கரை கட்டுமானமும் அதற்குக் குறைவாகவும் சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்பிற்குக் கிடைக்கும். மேலும் கூடுதலாகக் கிடைக்கும் ஒவ்வொரு 0.1 விழுக்காட்டிற்கு அதிக சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்பிற்கு, குவிண்டால் ஒன்றுக்கு 25.8823 பைசா கூடுதலாக விலை கிடைக்கும்படி ஆணை வெளியிட்டுள்ளது. இதன்படி சர்க்கரை ஆலைகளிடமிருந்து விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 238-லிருந்து ரூ. 274 வரை கிடைக்கும். கரும்பின் விலை நிர்ணயம் செய்யும்போது சர்க்கரை ஆலைகளின் நிதி நிலைமையையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. சர்க்கரை ஆலைகள் சங்கம், சர்க்கரை ஆலைகளின் சிரமங்களை விளக்கி விலை உயர்த்தும்போதெல்லாம் விலை உயர்த்த வேண்டாமென்று கோரிக்கை விடுகின்றனர். இருப்பினும் மாநில அரசு, விவசாயிகளின் நலனைக் கருதி, கரும்பிற்கு கட்டுபடியாகக்கூடிய விலையை பரிந்துரை விலையாக அறிவித்து ஆணை வெளியிடுகின்றனர். சமீபத்தில் நடப்பு 1988-89 ஆம் ஆண்டிற்கு, மைய அரசு கரும்பிற்கு அடிப்படை விலையாக ரூ 190-லிருந்து டன் ஒன்றுக்கு ரூ. 195 ஆக உயர்த்தியுள்ளது. அதைக் கருத்தில் கொண்டு மாநில அரசு தான் அறிவித்த பரிந்துரை விலையை டன் ஒன்றுக்கு ரூ. 220-லிருந்து ரூ. 225 ஆக உயர்த்தலாமா என பரிசீலித்து வருகிறது.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1987-88 ஆம் ஆண்டில் சர்க்கரை விலையை ஏற்றியும், கட்டுப்பாட்டு ஒதுக்கீட்டிற்கு 50 விழுக்காடு என்று இருந்ததை 55 விழுக்காடாக ஆக்கியும், சர்க்கரை ஆலைகளுக்குச் சலுகை வழங்கியும், மைய அரசு 1987-88 ஆம் ஆண்டில் ஒரு டன்னுக்கு ஏற்றிய 5 ரூபாயைச் சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்குக்

1989 பிப்ரவரி 18] [திரு. மா. மணிமாறன்]

கொடுக்காமல் இருந்ததை விவசாயிகள் கடந்த அரசுக்குப் பல முறை வேண்டுகோள் விட்டும், நேரடியாகப் பார்த்தும், கேட்டும், விவசாயிகளுக்கு உதவாத நிலையில் இப்போது பொறுப்பு ஏற்றிருக்கின்ற கலைஞர் அரசும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் கொடுப்பதற்கு ஆய்வு செய்வதைப் பாராட்டி, நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து, இது போன்ற கவன ஈர்ப்புக் கொடுப்பவர்கள் வினாவைத்தான் எழுப்பலாமே தவிர, வினா இல்லை என்று சொன்னால் விட்டு விடலாம்; அதனால் கண்டிப்பாகக் கேட்டுத்தான் ஆக வேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

2. தகவல் கோரல்.

(அ) ஓட்டல் உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை.

திரு. வே. பெரியசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வாரத்திற்கு முன்பு செய்தித் தாளில் மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் ஓட்டல் முதலாளிகளுடன் கலந்து பேசி உணவுப் பண்டங்களின் விலைகளையெல்லாம் குறைப்பதாகச் செய்தித் தாளில் அறிந்தேன். அவர்களும், அவைகளுடைய முதலாளிகளெல்லாம் ஒன்று சேர்ந்து குறைப்பதாகச் சொல்லியிருந்தார்கள். அதை எப்பொழுது குறைக்கப் போகிறார்கள் என்ற செய்தியை மாண்புமிகு அமைச்சரவர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எந்த அடிப்படையில் தாங்கள் எழுப்புகிறீர்கள் என்று சொல்ல முடியுமா? இப்படி எழுப்புவதற்கு அவையில் இடமில்லை. தனியாகக் கேட்க வேண்டும்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

* **திரு. ஆர். சிங்காரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது குறித்துப் பதில் அளிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் ஆய்வில் உள்ளது. அதுபற்றி அறையிலே கேட்க வேண்டும்.